முருகப்பெருமான் துணை

**மகான் ஏயர்கோன் கலிக்காம நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

25.11.2021, வியாழக்கிழமை

1. ஞானபலம் அடைய வேண்டி
ஞானிகளை நோக்கி பூசை
தானதருமமுடன் செய்து வருக
தக்க வழிகாட்டும் தவராசனே
2. அரசனே அரங்கனே பெருமை கூறி
அகிலமதில் பிலவ தேளின் திங்கள்
வரமென நவதிகதி குரு வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள், 25.11.2021 வியாழக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை ஏயர்கோன் கலிக்காம நாயனாரும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
ஆசிதந்து மக்களை நோக்கி
அழியாமை பெறும் வரம்தனை
4. வரம்தனை ஞானமாக அருளி
வழிகாட்டிடும் அரங்க ஞானி
அறம்தனையும் மகா சக்தியாக
அனைவரும் வணங்கி வருக
5. வருகவே மக்களை பிறவிவழி
வாட்டும் கருமவினை அகன்று
தரும பலமாக தவத்தின் பலமாக
தரணியோர்க்கு ஆசிபலம் கிட்டி
6. கிட்டியே உலகோர்க்கு காப்பு
குறைவின்றி அரங்கனால் நடக்கும்
தட்டாது ஞானவான்கள் அருளும்
தருமபாதையை அகலா தொடர
7. தொடரவே கலியுகம் தன்னில்
தேசிகன் வழிகாட்டல் தானும்
தடையின்றி வளர்ச்சி கண்டு
தரணியே மாற்றம் காண்கும்
8. காண்கவே அரங்கர் ஞானம்
கலியின் இன்னல் போக்கும்
ஆன்மீக ஞான தயவு நெறியே
**(உயிர்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு எல்லா உயிர்களின்பால் அன்பு செலுத்துவதே ஆன்மீக ஞான தயவு நெறி ஆகும்)**
அனைவரையும் மீட்டுகாக்கும்

9. காக்கவே அவதாரம் தன்னை
கந்தவேலன் சக்தியாக அரங்கன்
**(அரங்கனே முருகன், முருகனே அரங்கன்)**
ஆக்கமுடன் நிகழ்த்தி இருக்க
அரங்கன்வாழ் பிரணவக்குடிலை

10. குடிலை ஏழாம்படை வீட்டை
குவலயத்தார் அனுகி வந்து
தேடியே குருவே என வணங்கி
தொடர் ஆசிதனை ஏற்று

11. ஏற்றுமே அரங்கா முருகா என
இணையிலா செபதபம் செய்து
மாற்றம் கருதி வேண்டி வர
மண்ணுலகம் ஞான உலகம் ஆகும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

காலையிலும் மாலையிலும் சிறிதுநேரம், இடையில் ஒய்வு நேரத்திலோ அல்லது எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் **“ஓம் சரவண ஜோதியே நமோ நம”** என்றும் **“ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி”** என்றும் சொல்லி வழிபட்டு வரவேண்டும். நடக்கும் போதோ, குளிக்கும் போதோ, பயணத்திலோ, உணவு அருந்தும்போதோ **“முருகா முருகா”** என்று நாம ஜெபம் சொல்லி வந்தாலே அது பூஜையாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பது ஓங்கார குடில் தொண்டர்களாகிய எங்களது அனுபவம்.

எங்களது குருநாதர் மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர் தனது இளம் வயதில் சைக்கிளில் பயணம் செல்லும்போதே **“முருகா முருகா”** என சொல்லிக் கொண்டே செல்வார். அந்த பூஜையை முருகப்பெருமான் ஏற்றுக்கொண்டார்.

உலக நன்மைக்காகவும், உலக மக்களின் நன்மைக்காகவும் முருகப்பெருமானால் இந்த உலகத்திற்கு அனுப்பி வைக்க பட்டவர்தான் ஓங்காரக்குடிலாசான் மகான் ஆறுமுக அரங்க மகா தேசிக சுவாமிகள்.